1973 ஆகஸ்ட் 13]

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, தேன் உற்பத்திக்காக காதி போர்டு செயல்படுத்துகின்ற 5 திட்டங்களில் 1972-73-ல் கால்ராயன் மலைத் திட்டம் தவிர மற்ற 4 திட்டங்களிலேயும் குறைந்த உற்பத்தி காண்கிறோம். அதற்கான காரணங்களைக் கண்டறிந்து உற்பத்தியைப் பெருக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

5. ஒத்திவைப்புத் தீர்மானம்

வயது வந்த பள்ளிக் குழந்தைகள் காணாமற் போவதாகப் பத்திரிகையில் வந்த செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள்
'That many teen-aged school children in Madurai and some places like Samayanallur were found to be missing or absconding during the last week. It appears that there seems to be several cases of lost children which has not been reported to the Police.' என்ற பொருள்பற்றி விவாதிக்க, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்க அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I have given notice of the following motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules: "The House do stand adjourned to discuss about an urgent matter of public importance, namely, that many teen-aged school children in Madurai and some place like Samayanallur were found to be missing or absconding

during the last week. It appears that there seems to be several cases of lost children which has not been reported to the Police.''
தலைவர் அவர்களே, பத்திரிகைகள் வாயிலாக இந்தச் செய்தியைப் பார்த்தது ஒருபுறம் இருக்க, பல குழந்தைகள், அதிலும் வயதுவந்த குழந்தைகள் எல்லாம் அடிக்கடி இப்பொழுது காணுமல் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிழக்கு மதுரையைச் சேர்ந்த போலீஸ் அதிகாரி அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள், பல குழந்தைகள் போனது போலீசுக்குத் தகவல் இல்லாமல் இருக்கிறது என்று. இந்த, பள்ளிகளுக்குச் செல்கின்ற குழந்தைகள் எப்படிக் காணுமல் போகின்றார்கள் என்று அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு மிகவும் கவலை கொடுக்கும்படியான நிலைமை இருந்தால், இந்தக் குழந்தைகளை யார் பிடிக்கிறார்கள்? பிள்ளை பிடிக்கின்றவர்கள் இன்னும் தமிழ்நாட்டில் இருக்கிறார்களா? இந்தக் குழந்தைகளைப் பிடித்து என்ன செய்கின்றார்கள்? அல்லது எதற்காகப் பயன்படுத்து கின்றார்கள்? பல பத்திரிகைகளிலே பார்க்கும்போது, 'ஸ்மக்லர்ஸ் கேங்க்' எல்லாம் இருப்பதாகவும், அவர்கள் இந்தப் பிள்ளைகளைப் பிடித்துச்சென்று அவர்களுடைய கேங்கிலே சேர்த்து, தங்களுக்கு உபயோகப்படுத்துவதாகவும் பார்க்கிறோம். இந்தப் பிள்ளைகளினுடைய முக்கியத்துவத்தை அறிந்து பாதுகாப்பது, நம்முடைய நாட்டினுடைய பொறுப்பு, அரசினுடைய பொறுப்பு. அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு போலீஸ் அதிகாரிகள் என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள்? அதற்கு ஆவன செய்ய வேண்டும். இப்படி பிள்ளைகள் காணுமல் போய்க்கொண்டே இருந்தால், வருங்காலத்திலே—ஒருபுறம் நாம் பாமிலி பிளானிங் திட்டத்தை வைத்திருக்கிறோம்—மறுபுறம் இருக்கக்கூடிய குழந்தைகளும் காணுமல் போனல்—கஷ்டம் ஏற்படும். பல குடும்பங்களிலே ஒரே பிள்ளையாக இருக்கிற குழந்தைகளும் காணுமல் போயிருக்கின்றன என்ற தகவலும் என்னிடத்திலே இருக்கிறது. அந்தப் பெற்றோர்களுடைய மனக் கஷ்டம் ஒருபுறமிருக்க, குழந்தைகள் காணுமல் போவதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக, 'ஆலிவர் டுவிஸ்ட்' என்ற புத்தகத்தில் ஃபேகின் என்ற ஒருவன், இருந்த பிள்ளைகளைப் பிடித்துச் சென்று பிச்சையெடுக்கப் பயன்படுத்தின அளவிலே,

1973 ஆகஸ்ட் 13] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

நம்முடைய தமிழ் நாட்டிலே வண்ணாரப்பேட்டையிலே செய்து கொண்டிருந்தார்கள். அப்படி யாராவது இருக்கிறார்களா? இந்தக் குழந்தைகள் எங்கு செல்கின்றன, எப்படிக் கொண்டு செல்கின்றார்கள், பள்ளிகளுக்குச் செல்கின்ற குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்ற முறையில் நடவடிக்கை எடுக்க, அந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு அதுபற்றிய விவரங்களைத் தருமாறு கோரினேன். அதற்கு ஏற்ப இப்படி சில இடங்களிலே காணமல் போய்விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. ஆனால், அதுபற்றி புகார்கள் போலீசாருக்குத் தரப்படவில்லை. தஞ்சாவூரிலே உயர்நிலைப் பள்ளி மாணவன் ரவி சங்கர் என்ற மாணவன்—காணப்படவில்லையென்று குறிப்பிட்டதாகவும், ஆனால் இதுவரையிலே எந்தப் புகாரும் போலீசுக்கு வரவில்லையென்றும் அங்கிருந்து செய்தி வந்துள்ளது.

அதைப் போல், தஞ்சை சரபோஜி கல்லூரி பேராசிரியர் ஒருவரின் மகன் காணமல் போய் மீட்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. அதுபற்றியும் போலீசுக்குத் தகவல் இல்லை.

தஞ்சை சௌராஷ்டிரா நகரில் இரண்டு பெண்கள் காணமல் போனதாகக் கூறப்படுகிறது. ஆனால், அதுபற்றியும் இதுவரையிலே எந்தவிதமான புகாரும் போலீசுக்கு வரவில்லை.

இதுபற்றி ஒரு தீர்மானம் வந்தபிறகு அவர்களாகப் புகார் கொடுக்காவிட்டாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அங்குள்ள காவல் துறையினர் மூலமாக அதுபற்றி விசாரணை நடத்துவதாகக் கூறி இருக்கிறார்கள்.

மதுரையைப் பொறுத்தவரையிலே, மதுரையைச் சேர்ந்த சீனிவாச ஐயரின் 15 வயது மகன் ரெங்கராஜன் என்பவன் 2—8—1973 முதல் 9—8—1973 வரை ஒருவார காலத்திற்குக் காணமல் போயிருந்தான். அவன் கண்டுபிடிக்கப்பட்டு அவனுடைய சகோதரரிடம் ஒப்படைக்கப்பட்டான். இந்தப்

பையனைப் பொறுத்தவரையில் செய்தி, இவன் அடிக்கடி காணுமல் போய்விடுவான், பிறகு போலீசாரால் மீட்கப்படுவான் என்பதாகும். என்ன இருந்தாலும் இதை அலட்சியப்படுத்துவதாக இல்லாமல், இவை பத்திரிகைச் செய்திகளாக இருந்தாலும், போலீசுக்கு உரிய புகார்கள் இதுவரையிலே வாமல் இருந்தாலும் கூட, இதிலே மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று காவல் துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறுர்கள். ஆகவே, அந்த அளவிற்கு இந்தத் தீர்மானம் பயன்படும் என்ற அளவிலே இதை விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் கொடுத்த உறுதிக்குப் பின்னர் இந்த அவையை ஒத்தி வைத்து இப்பொருள்குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(4) அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 244-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"விதி 41 (3)-ன்படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்த வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.